# தாட்கோ மூலம் உணவு தயாரித்தல் பயிற்சி

**சென்னை, நவ. 28:** தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் மதம்மாறிய தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு உணவு தயாரித்தல் பயிற்சியினை தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் வழங்கவுள்ளது. இதற்கான நேர்காணல், மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சி-15 என்ற முகவரியில் டிசம்பர் 1-ம் தேதி முதல் 3-ம் தேதி வரை நடைபெறும்.

உணவு தயாரித்தல்,உணவு பரிமாறுதல்,பேக்கரி மற்றும் கன்ஃபெக்ஷனரி பயிற்சிகள் ஆகியவை வழங்கப்படவுள்ளன.

18 முதல் 35 வயது வரையுள்ள பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத நபர்கள் இதில் கலந்து கொள்ளலாம். ஏற்கெனவே தாட்கோ மற்றும் வேறு அரசுத் துறையின் மூலம் இலவச பயிற்சிகள் பெற்றவர்கள் இதில் சேரக் கூடாது.

கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், பள்ளி/கல்லூரி மாற்றுச் சான்றிதழ், பிறந்த தேதி சான்று, குடும்ப அட்டை, வருமானச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை, 3 புகைப்படம் ஆகியவற்றின் அசல் மற்றும் சான்றொப்பமிட்ட சான்றிதழ்களை கொண்டுவர வேண்டும். பயிற்சியும்,வேலைவாய்ப்புப் பயிற்சியும் நிறுவனத்தால் ஏற்படுத்தி தரப்படும். மேலும் விவரங்களுக்கு: 9443192157,9025367228.

மின்னஞ்சல்:

tahdcoheadoffice@yahoo.com

இணையதளம்:

www.tahdco.tn.gov.in